
## திருச்சிற்றம்பலம்

## திருநீலகண்டநாயனார் புராணம்

எல்லை மருவா நெறியடைந்த தில்லைவாழ் அந்தணரைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத் தொகையில் அடுத்து நவின்ற திருநீலகண்டம் என்ற பெயருடன் நிகழ்ச்சியுற்ற நீடு செலுத்திய வாய்மைத் தன்மை விளங்குதற்கு இடமான அன்புடைய தொண்டர் செய்த தவத்தினது வரலாற்றினை கூறலுற்றாம் .

பண்டைப் பெருமையோடு பழமைமூதூர் என்று போற்றப்படும் தில்லைமூதூர் தனில் வேட்கோவர் அதாவது மட்பாண்டம் செய்யும் குயவர் குலத்தில் வந்தவரே திருநீலகண்டர். நின்றாலும் கிடந்தாலும் நடந்தாலும் நாவினிக்கச் சொல்லும் நாமம் திருநீலகண்டம் என்றமையால் புனற்சடையாருக்கு அன்பராகிய இவரை திருநீலகண்டர் என்ற திருநாமம் செப்பியே தில்லையூரார் அழைத்தனர். பொய்யை ஒழித்து அறநெறியில் வாழ்பவர். அடியார் பணியை உலகில் சிறந்ததாகக் கருதப்படும் இல்லறவாழ்வினை வழுவாது நடத்தி வந்தவர் சைவத்தின் சார்பே உண்மைப் பொருள் என உணர்ந்து ஒழுகுபவர்.




தம் குலவழக்கப்படி மட்பாண்டம் புனைந்து வரும் வருவாயினைத் தம் உணவுக்கு ஆக்கிவிட்டு, சிவனடியார்க்கு வேண்டிய திருவோட்டினை அவ்வடியார் பெருமக்கள்

மகிழ்ந்து கொள்ளும்படி அளித்துவந்தார். அவரது மனைவியார் அருந்ததியை விட கற்பொழுக்கத்தில் சிறந்தவர் .

குறிப்பு : *நமது தருமத்தில் பெண்கள் திருமண வேளையில் அருந்ததி தரிசனம் செய்வது வழக்கம். அருந்ததி சப்த ரிஷிகளில் ஒருவரான வசிஷ்ட்டரின் பத்தினி. ஒருசமயம் அக்னி தேவன் சப்தரிஷிகளின் மனைவிகள் மிக்க அழகுடையவர்கள் என்பதைத் தெரிந்து அவர்கள் அனைவரையும் ஆரத்தழவி அனுபவிக்க ஆசைக்கொள்கிறான். இந்த விபரித ஆசையின் அனர்த்ததை அறிந்து கொண்ட அவனது மனைவி ஸ்வாகா தேவி, ஒவ்வொரு ரிஷி பத்தினயாய் உருவெடுத்து அக்னி தேவனை ஆரத்தழுவி அவனை மகிழ்விக்கிறாள். எவ்வளவு முயன்றும் அவளால் வஷிட்டரின் மனைவி அருந்ததியின் உருவை எடுக்கமுடியவில்லை. இஃது அருந்த்தியின் கற்பின் வீரியம் என்பதை உண்ர்ந்து கொண்ட ஸ்வாகா, அருந்த்தியிடம் வந்து நீயே உலகில் கற்பில் சிறந்தவள். தமது திருமண வேளையில் உன்னை தரிசிப்பவர்கள், சகல சம்பத்தும் பித்ரோசிர்வாதம், புத்ர பேறு செல்வம் சேர்தல் போன்ற நற்பயங்களைப் பெறுவர் என்று ஆசிர்வதித்து செல்கிறாள்.*

கற்புக்கனலாய் ஒளிரும் மங்கை நல்லாளொடு நல்லறமாம் இல்லறம் இனிதே கடைப்பிடித்துவந்தார். அக்காலத்தில் இளமை மீதூர சிற்றினபத்துறையில் எளியவராகிவிட்டார். தேன் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியைவிட அழகிற் சிறந்த திருநிலகண்டரின் மனைவி தம் கணவர் ஒருநாள் பரத்தையை அணைந்து இல்லம் வந்ததால் மானம் பெறாது வந்த வருத்தம் ஆற்ற இயலாதவராகி இல்லறக் கடமைகளை இனிதே நிறை வேற்றினாலும் மெய்யுறு புணர்ச்சியொன்றுக்கு மட்டும் இசையவில்லை.

அன்புடைய நாயனார் இல்லாளது மனவருத்தம் நீக்க வேண்டியனவற்றையெல்லாம் இரந்து பணிந்து கூறி, அதனால் ஆரணிப்படும் புலவி நீக்கினாள் எனக் கருதி அவரது மேனியைத் தழுவ முனைந்தார் அப்போது மானம் பொறாத மங்கை நீவிர் எம்மைத் தீண்டு வீராயின் திருநிலகண்த்தின் ஆணை உம்மைத் தடுப்பதாக என்று ஆணையிட்டார். “தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்” என்றார். ஆணையைக்

கேட்டு அதிர்ந்த அடியாரும் அம்மையாரை அயலாளாக நோக்கி “நீ என்னை என்று கூறாது எம்மை எனக் கூறி ஆணையிட்டமையால் உன் இனத்தைச் சேர்ந்த மங்கையர் எவரையும் என் மனத்தாலும் இனி தீண்டமாட்டேன் என்று திடவார்தைகள் பகன்றார்.

கற்பில் மிக்க மனைவியாரும் கணவரும் தத்தம் மனங்கோனாதவாறு, இன்முகம் காட்டியும், இல்வாழ்க்கையில் பொருந்தும் செயல்களைச் சோர்வின்றி காத்தும், அவ்வீட்டிலே இருவரும் தனித்தனியாய் சூழுறைக் கேற்றவாறு மேனி தீண்டா நோன்புடன் நல்லறம் பேணி வந்தனர். இந்நிலைமை அண்டை அயலார் போலும் அறியாதவண்ணம் திண்ணிய மனத்தறாய் வாழ்ந்து வந்தனர்.

இந்நெறி ஒழுகிவரும் நன்னாளில் இத்தொண்டர் தம் உண்மைத் தன்மையை உலகோர் கண்டு அறியவேண்டும் என்ற எண்ணமிக்கால் பொன்னார் சடையன் இறைவன் சிவயோகியர் தவவேடம் கொண்டு, கீளும் கோவணமும் அணிந்து திருமேனியின் தோளிலும் மார்பிலும் துவள்கின்ற பூணூல், திருநீற்றின் ஒளியே வளரும் திரிபுண்டரமானரெற்றியும், திருவாயில் வெண்ணிலவு ஒத்த புன்முறுவல் கொண்டவரும், பிச்சையிடுவதற்கான திருவோட்டையும் ஏந்தி திருநிலகண்டரின் இல்லம் சேர்ந்தார்.

இவரைக் கண்களால் கண்டபோழ்தே கறைகண்டரின் முறைமைத் தொண்டர் இவரே என்று கருதிய திருநிலகண்டர் இவரை எதிர் கொண்டு அழைத்து “எம்பெருமான் நான் செய்யக் கூடிய பணி என்ன” என்று வினவலானார்.

இறைவனும் “ நம்பியே இந்த ஓட்டை நின்னிடம் வைத்திருந்து நான் வேண்டும் போது தருவாயாக” என்று கூறினார். ஈடு இணையில்லாது ஓடுயிது, பொன்மணியை விட கண்ணாய்க் காக்கவேணடிய பொருள் இது" என்றார்.

குலாலரும் அவரது குணவதியாரும் அத்திருவோட்டினித் தம் இல்லம் வந்த பெரும் செல்வமாகக் கருதி தக்க காவலுடய இடத்தில் வைத்துப் பாதுகாத்தார். பல நாட்களூக்குப் பின்னர். குலாலரின் உயரிய உண்னமத் தன்மையைக் குவலயம் அறியச் செய்யவேண்டும் என்ற நோக்கில் இரைவனாரே, குயவர் வைத்த இடத்திலிருந்து அத்திருவொட்டினை மரைத்து திருவிளையாடல் புரிந்தார். வைத்த இடத்தில் திருவோட்டினை காணாமல் செய்தார்.

இறைவன் முன் வந்தவர் போல் வந்து அடியாரிடம் தாம் கொடுத்து வைத்த திருவோட்டினைத் தருமாறு கேட்டார்.அடியார் உடனே உட்சென்று நோக்கி அதிர்ச்சியுற்றார். தாம் மரைவாய் புதைத்த வோடு மாயமாய் மரைந்ததை அறிந்து பதறினார். வெளியே திரும்பி வந்து இறைவனிடம் விவரம் கூறினார்.தாம் தந்த திருவோட்டினைக் காணவில்லை.என் பிழையைப் பொறுத்தருள்க, அதனினும் அற்புதமான திருவோட்டினை யாம் உமக்குத் தருவோம்" என்று மனம் பதைபதைக்க பகன்றார்.

"துறவுக் கோலத்தில் வந்த இறைவரோ நான் உம்மிடம் அடைக்கலமாக க் கொடுத்த வோட்டினையல்லாது பொன்னாலான வோட்டினைத் தந்தாலும் நாம் அதனை ஏற்கவல்லேன் அல்லோம். வளமிக்க என் வோட்டினை வஞ்சனையால் அபகரித்துக்கொண்டீர்.

நான் இனி செய்வதென்ன என்று அடியார் வினவவும் , " உமது உண்மையை நிருபிக்க உமது மகனின் கைப்பற்றி குலத்தில் மூழ்கி சத்தியம் செய்வாயாக" என்று தவக்கோலம் கொண்ட சிவமே கூறினார்.

"ஐயன் மீது நீவிர் கூறிய வண்மை செயலாற்ற அருமை மகன் அடியேனுக்கு வாய்க்கப் பெறவில்லை என்று அடியார் கூறவே " அப்படியாயின் உம் இல்லாள் கைக்கரம் பற்றி நீரில் மூழ்குவாயாக" என்கிறார் கறைகண்டன். இல்லாளோடு வாழும் இல்லறத்தின் நிலைமையை ஊருக்கு உரைக்க விரும்பாத அடியார் தாமே மூழ்கி சத்தியம் தருவதாக க் கூறிடவே நஞ்சுண்ட இறைவன் கொஞ்சமும் இரங்கவில்லை. நான் தில்லைவாழ் அந்தணர்களிடம் போய் வழக்குரைப்பேன் என்று கூறி முன் செல்ல, அடியாரும் பின் தொடர்ந்தார்.

வழக்கின் போக்கில் இருபக்கமே உண்மை எடுத்து வைக்கப்பட்ட்து. அறம் கற்ற அந்தணர்கள் அடியாரிடம் இந்த துறவியார் கூறியப்படியே நீர் உமது இல்லாள் கரம் பற்றி வாக்கு சுத்தத்தை நிருப்பிப்பதே அறம் கூறும் வழியாகும் என்று தீர்ப்பு கூறினார். மனைவியின் கையைப் பிடித்து சத்தியம் செய்ய இயலாத்தைக் கூற இயலவில்லை எனினும் குலால அடிகளார் தமது குலமங்கையையும் அழைத்து வந்தார். எல்லோருமாக எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்புரீட்சரம் ஆலயம் சென்று, அவ்வாலயம் முன் அமைந்த நீர் நிலையை அடைந்து (தற்போது இளமையாக்கினான் குளம் என்று அழைக்கப்படுகிறது) ஒரு மூங்கில் தண்டு எடுத்து அதன் இருமுனைகளையும் இருவரும் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கினார்.மனைவியைத் தொட்டு கைப்பிடித்து மூழ்காத இந்நிலையை இறைவன் ஏற்கவில்லை. அப்போது தான் அடியார் பெருந்தகை தாம் முன்பு, தமது மனைவியை சிந்தையாலும், நினைவாலும் தீண்டப் பெறேன் என்று திருநீலகண்டத்தின் திருநாமம் செப்பி சூழுரைத்த விவரத்தை ஊரறிய, பாரறிய விளக்கினார். இவ்விருவரும் இந்நாள் வரை நெறி தவறா வாழ்வினை மேற்கொண்ட விவரத்தினை உலகோர் உணர்ந்து அதிசயித்தனர்.

நீர் நிலையில் மூழ்கி எழுந்த இருவரும் இதுவரை இருந்த முதுமைக்கோலம் நீங்கி விருப்புறும் இளமை பெற்று , சுற்றுளோர் கண்கள் முற்றும் திறந்து வியந்து நோக்கும் வண்ணம் அழகுடன் நின்றனர்.வானோர்கள் பூமாரிப் பொழிய இருவரும் நீர் நிலையைப் போன்றே பூமண்டியிலும் மூழ்கினர்.வேதியராய் வந்தவரைக் காணாது யாவரும் திகைத்து நிற்க அடியார் பெருந்தகையும், அழகே வடிவான அருங்குணவதியும் வானில் இடப வாகனத்தில் எழுந்தருளியிருந்த எம்பெருமானையும், அன்னை பார்வதியையும் ஒருங்கு சேர கண்ணாய் காணலுற்றனர்.கைக்கூப்பித் தொழுதனர். நாயனாரின் பெருமையை உணர்ந்த தேவர்களும், இறைவனின் அருள் காட்சி கோலத்தைக் கண்டு தரிசித்தார்கள்.இறைவனும், அடியாரையும் அவர் தம் மனைவியாரையும் பார்த்து" வென்று அடிப்படுத்திய ஐம்புலன்களால் மிக்கு விளங்குபவர்களே! நீங்கள் இப்போது என் அருளாள் மீண்டும் பெற்ற இளமைக் கோலத்துடன் எக்காத்தும் எம்முடன் இருப்பீராக என்று அருளிச் சென்றார். எவரும் செய்யமுடியாத அருளாய் நிறைந்த செயல்களைச் செய்து எவரும் பெற முடியாத இளமையைப் பெற்ற இருவரும் சிவலோகம் சென்று பேரின்பம் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தினர்.

"அருளின் ஆர்ந்த திறலுடைச் செய்கை செய்து சிவலோகம் அதனை எய்திப்

பெறவரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்றர் அன்றே "

- சேக்கிழார் சுவாமிகள்

**திருச்சிற்றம்பலம்**